JMC, Thiruvadanai-CC No.96/2024
Judgment Dated: 07.03.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07 ம் நாள் சனிக்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 96/2024**
CNR No. TNRM17-004480-2024

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.96/2024 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | தொண்டி காவல் நிலையம் குற்ற எண். 201/2024 |
| **எதிரியின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | ஆறுமுகம் |
| 4. | த/பெ. | : | வடங்கன் |
| 5. | தொழில் | : | டீ கடை தொழில், கூலி |
| 6. | முகவரி | : | கீழவண்டி,<br>திருவாடானை வட்டம்,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 45/2024 |
| 8. | சம்பவ நாள் | : | 28.09.2024 ம் தேதி 10.00 மணி |
| 9. | புகார் தேதி | : | 28.09.2024 ம் தேதி 10.30 மணி |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 28.09.2024 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 28.09.2024 ம் தேதி எதிரி காவல் நிலைய பிணையில் சென்றுவிட்டார். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 13.06.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 24.02.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024 ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024 ன் கீழ் |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | இல்லை |

| | | | |
|---|---|---|---|
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 07.10.2025<br>குறுக்கு விசாரணை – 07.10.2025<br>அ.சா.2 – முதல் விசாரணை – 05.02.2026<br>குறுக்கு விசாரணை – 05.02.2026<br>அ.சா.3 – முதல் விசாரணை – 12.02.2026<br>குறுக்கு விசாரணை – 12.02.2026 |
| 18. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 17.02.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச.311 பிரிவின்படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | திருமதி.ஜூட் ஏஞ்சலோ |
| 22. | எதிரி தரப்பு வழக்கறிஞர் | : | திரு.K.ரமேஷ் |
| 23. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 07.03.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, எதிரி பிரிவு 4(1)(C) TN Prohibition (Amendment) Act, 2024ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கு 23.10.2024ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 24.02.2026ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது,

அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.ரமேஷ் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:-

28.09.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி தொண்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் எந்தவிதமான அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக ஒரு சாக்குப்பையில் அரசு முத்திரை ஒட்டப்பட்ட 180 ML அளவுள்ள BLACK PEARL BRANDY-10 பாட்டில்கள் வைத்திருந்த குற்றம் புரிந்ததாக இவ்வழக்கின் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024-ன் கீழ் தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு பிரிவு 230 BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024-ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கி கூறி வினவிய போது, எதிரி குற்றசாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

5. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –</u>

28.09.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி தொண்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் எந்தவிதமான அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக ஒரு சாக்குப்பையில் அரசு முத்திரை ஒட்டப்பட்ட 180 ML அளவுள்ள BLACK PEARL BRANDY–10 பாட்டில்கள் வைத்திருந்தார் என்பதேயாகும்.

5(2) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 28.09.2024 தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்திலிருந்து புறப்பட்டு, தான், சார்பு ஆய்வாளர் திரு.விஷ்ணு மற்றும் காவலர் ராமச்சந்திரன் ஆகியோர் ரோந்து பணிக்கு சென்றபோது காலை சுமார் 10 மணியளவில் தொண்டி பேருந்து நிறுத்தத்திற்கு அருகே இவ்வழக்கின் எதிரி சந்தேகப்படும்படியாக ஒரு சாக்குப்பையை வைத்து நின்று கொண்டிருந்ததாகவும், ஆஜர் எதிரி மீது ஏற்கனவே சட்டவிரோத மது விற்பனை தொடர்பாக வழக்குகள் உள்ளதால் சார்பு ஆய்வாளர் அவரை விசாரித்தபோது எதிரி தான் வைத்திருந்த சாக்குபையில் 180 மிலி அளவுள்ள Black Pearl Brandy–10 பாட்டில்கள் வைத்திருப்பதாக ஒப்புதக் கொண்டதாகவும், பின்னர் 10.15 மணியளவில் எதிரி வைத்திருந்த Black Pearl Brandy–10 பாட்டில்களையும் சார்பு ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் தானும் காவலர் ராமச்சந்திரனும் சாட்சி கையொப்பம் இட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள அ.சா.ஆ.1 முதலாவது சாட்சி கையொப்பம் தன்னுடையதுதான் என்றும் பின்னர் சம்பவயிடத்தில் வைத்தே தனது மற்றும் காவலர் ராமச்சந்திரன் முன்னிலையில் எதிரியிடமிருந்து கைப்பற்றிய 10 மது பாட்டில்களையும் கொட்டி அழித்துவிட்டதாகவும், பின்பு எதிரியை அழைத்துக் கொண்டு நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்ததாகவும், இவை அனைத்திலும் சார்பு ஆய்வாளருக்கு உதவியாக தானும் காவலர் ராமச்சந்திரனும் உடன் இருந்தோம் என சாட்சியமளித்துள்ளார்.

5(3) அ.சா.2 தனது சாட்சியத்தில், கடந்த 28.09.2024ம் தேதி காலை 10.00 மணியளவில் தொண்டி காவல நிலைய சார்பு ஆய்வாளர் விஷ்ணு தலைமையில் தானும், மு.நி.கா. 1215 கணேஷ் என்பவருடன் தொண்டி சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி வரும்போது தங்களுக்கு கிடைத்த இரகசிய தகவலின்படி தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் சாக்குப்பையுடன் ஒருவர் நின்று கொண்டிருந்ததாகவும், அவரை விசாரித்தபோது அவர் தன் பெயர் ஆறுமுகம் த/பெ. வடங்கன் கிழவன்டி கிராமத்தை சேர்ந்தவர் என கூறினார் என்றும் மேலும் அவர் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்த போது அதில் 180 மிலி Black Pearl Brandy–10 பாட்டில்கள் இருந்ததாகவும், அந்த பாட்டில்களை விற்பனைக்காக வைத்திருந்ததாக கூறியதாகவும், அதை வைத்திருப்பதற்காக அரசு அனுமதி எதுவும் அவரிடம் இருக்கவில்லை என்றும் அதனால் அவரை காரணம் கூறி சார்பு ஆய்வாளர் தங்கள் முன்னிலையில் கைது செய்ததாகவும், அவர் வைத்திருநத பிராந்தி பாட்டில்களை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராதால் தங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சியில் உள்ள அ.சா.ஆ.2 இரண்டாவது கையெழுத்து தன்னுடையது என்றும் பின் கைது செய்யப்பட்ட எதிரியுடனும் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துகளுடனும் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.201/24, பிரிவு 4(1)(C) TNP Act–ன் படி வழக்கு பதிவு செய்ய சார்பு ஆயவாளருக்கு உதவியாக இருந்ததாகவும், சார்பு ஆய்வாளர் தன்னை விசாரித்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

5(4) அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 28.09.2024 தேதி காலை 10.00 மணிக்கு நிலைய அலுவலில் இருந்தபோது மதுவிலக்கு சம்மந்தமாக கிடைக்கபெற்ற இரகசிய தகவலின்படி போலிஸ் பார்ட்டிகளுடன் தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகே சென்றபோது அங்கு சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்த எதிரி தங்களை பார்த்ததும் தப்பி ஓட முயற்சித்தவரை பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் ஆறுமுகம் த/பெ.வடங்கன் என்றும் அவருடைய சொந்த லாபத்திற்காக விற்பனை செய்வதற்காக

180 மிலி அளவு கொண்ட Black Pearl Brandy-10 பாட்டில்கள் வைத்திருந்ததை பிடித்து சாட்சிகள் முதல் நிலை காவலர் 1215 மற்றும் இரண்டாம் நிலை காவலர் 2381 ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.3 அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், பின்னர் எதிரியை காரணம் கூறி கைது செய்து வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து 10.30 மணிக்கு நிலைய குற்ற எண்.201/24, பிரிவு 4(1)(C) TNP Act-ன் படி அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் அ.சா.1 கணேஷ், அ.சா.2 ராமச்சந்திரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள பதிவு செய்துள்ளார். பின் எதிரியை நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

5(5) பின் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act-ன் கீழ் தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து எதிரிக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS-ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவியபோது எதிரி அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP Act-ன் படி சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

## தீர்வு

8. 28.09.2024 ம் தேதி காலை 10.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரி தொண்டி காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட தொண்டி புதிய பேருந்து நிலையம் அருகில்

எந்தவிதமான அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாபம் கருதி விற்பனை செய்வதற்காக ஒரு சாக்குப்பையில் அரசு முத்திரை ஒட்டப்பட்ட 180 ML அளவுள்ள BLACK PEARL BRANDY–10 பாட்டில்கள் வைத்திருந்த குற்றம் புரிந்ததாக இவ்வழக்கின் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Act, 2024–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகமற நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை நன்கு கூர்ந்து கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

9. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் தனது வாதுரையில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.1, அ.சா.2, அ.சா.3 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்கள் எதிரியின் குற்றச் செயலை இணைக்கக்கூடிய வகையில் இருப்பதாகவும், இவ்வழக்கு முறையாக புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரி பிரிவு 4(1)(C) TNP Amendment Act, 2024 ன் கீழ் தண்டிக்கப்பட வேண்டியவர் என வாதிட்டார்.

10. எதிரி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசுத்தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் ஒருவருக்கொருவர் முரண்பட்டு சாட்சியம் அளித்திருப்பதாகவும், புலன்விசாரணை அதிகாரியால் இவ்வழக்கு முறையாக புலன்விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எனவே, எதிரியை மேற்படி குற்றவினைக்கு உள்ளாக்குவது நீதியின் நலனுக்கு உகந்தது அல்ல என வாதிட்டார்.

11. இவ்வழக்கில் விசாரணை அதிகாரியான அ.சா.3 உடன் சம்பவ இடத்திற்கு சென்று மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்றியபோது அதில் சாட்சி கையொப்பம் செய்தது குறித்தும், எதிரி மீது வழக்கு பதிவு செய்ய அ.சா.3 ற்கு உதவியாக இருந்தது குறித்தும், அ.சா.1, அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார்கள். இந்நிலையில், அ.சா.2 தனது குறுக்கு விசாணையில் எதிரியிடமிருந்து கைப்பற்றிய 10 எண்ணம் 180 மிலி அளவுள்ள Black Pearl Brandy பாட்டில்களை சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையம்

கொண்டு சென்றோம் என சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அ.சா.1, அ.சா.3 கைப்பற்றிய மதுபாட்டில்களை சம்பவ இடத்தில் வைத்தே கொட்டி அழித்ததாக சாட்சியம் அளித்துள்ளனர். வழக்கில் மிக முக்கியத்துவம் வாய்ந்த வழக்குச் சொத்தான மதுபாட்டில்களை கைப்பற்றி அழித்தது குறித்து அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் நீதிமன்றத்திற்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்தாததால் அது இவ்வழக்கினை பாதிக்கும் விதமாக அமைந்துள்ளது.

12. மேலும் இவ்வழக்கில் எதிரியிடமிருந்து சம்பவ இடத்தில் வைத்து மதுபாட்டில்களை கைப்பற்றும்போது சம்பவ இடத்தில் வைத்தே அ.சா.3, அ.சா.ஆ.3 அத்தாட்சியை தயார் செய்ததாகவும் அதில் அ.சா.1, அ.சா.2 ஆகியோர் தங்களது அ.சா.ஆ.1, அ.சா.ஆ.2 சாட்சி கையொப்பங்களை செய்ததாகவும் முன்னிலைப்படுத்திய நிலையில் அ.சா.ஆ.3 அத்தாட்சியை பார்க்கையில் அது CCTNS மூலம் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியாக தெரியவருகிறது. சம்பவ இடத்தில் வைத்து கணினி மூலம் CCTNS அத்தாட்சி எவ்வாறு உருவாக்கப்பட்டது என்ற சந்தேகத்தினை இந்நீதிமன்றத்திற்கு எழுப்புகிறது. மேலும் இதுகுறித்து அரசு தரப்பு சாட்சிகள் தெளிவாக எடுத்துரைக்காத நிலையில், அது இவ்வழக்கினை கூடுதல் பாதிப்படைய செய்கிறது.

13. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை சம்பவ இடத்தில் வைத்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.3 அழித்ததாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்திய நிலையில் தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 பிரிவு 13–A படி மதுபானம் தொடர்பான குற்றங்களில் கைப்பற்றப்படும் மதுபானங்களை அரசுடைமை ஆக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937 பிரிவு 32ன் படி Toddy or wash or sonti soru ஆகிய மதுவகைகளை சம்பவயிடத்தில் வைத்து கொட்டி அழிப்பதற்கும் Illicit arrack மது வகைகளை மாதிரி எடுத்துவிட்டு கொட்டி அழிப்பதற்கு மட்டும் தான் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு

சொத்துகள் உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் கொட்டி அழிக்கப்பட்டதாக சொல்லப்படும் நிலையில் எழுத்து பூர்வ உத்தரவு எதுவும் வழக்கில் தாக்கல் செய்யாத நிலையிலும் மதுபானங்களை கொட்டி அழித்துவிட்டு காலி மதுபாட்டில்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாத நிலையிலும் அரசு தரப்பில் கைப்பற்றப்பட்ட 10 Black Pearl Brandy மதுபாட்டில்களை சம்பவ இடத்தில் வைத்து கொட்டி அழித்ததாக தெரிவிப்பது ஏற்புடையதாக அமையவில்லை.

14. மேலும், The Tamilnadu Liquor(Possession for Personal Consumption) Rules 1996 [Amended vide G.O.(MS) No.14,H.P&EVI Department, dated 09.06.2017] ன் படி ஒரு தனிநபர் தனது சொந்த தேவைக்கு வைத்திருக்கும் மதுபான அளவை விட எதிரி குறைவாக வைத்திருந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கும் நிலையில் எதிரி அந்த மதுபாட்டில்களை சட்டவிரோத விற்பனைக்காக தான் வைத்திருந்தார் என்பதை நிரூபணம் செய்யும் வகையில் இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரையும் சேர்க்காததாலும், எதிரி விற்பனை செய்வதற்காக மதுபாட்டில்களை வைத்திருந்ததை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் அமையாத நிலையிலும், அரசு தரப்பு வழக்கின் மேல் எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15. எனவே இறுதியாக, எதிரி பிரிவு 4(1)(C) TN Prohibition (Amendment) Act, 2024 ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

16. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்ல, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து

JMC, Thiruvadanai-CC No.96/2024
Judgment Dated: 07.03.2026

சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:46:24 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

<u>அரசு தரப்பு சாட்சிகள் :-</u>

1. அ.சா.1 திரு. கணேஷ் (காவலர்)
2. அ.சா.2 திரு. ராமச்சந்திரன் (இரண்டாம் நிலை காவலர்)
3. அ.சா.3 திரு. விஷ்னு (சார்பு ஆய்வாளர்)

<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :-</u>

1. அ.சா.ஆ.1 28.09.2024 அத்தாட்சியில் உள்ள அ.சா.1 ன் கையொப்பம்
2. அ.சா.ஆ.2 28.09.2024 அத்தாட்சியில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம்
3. அ.சா.ஆ.3 28.09.2024 அத்தாட்சி
4. அ.சா.ஆ.4 28.09.2024 முதல் தகவல் அறிக்கை

<u>அரசு தரப்பு சான்று பொருட்கள் :-</u>

-- இல்லை --

<u>எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:-</u>

--இல்லை--

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:46:31 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :-

1. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

--உண்மை நகல்--

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.03.07 17:46:37 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.